[1989 ஏப்ரல் 4

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோள் அரசால் பரிசீலிக்கப்படும்.

புதிய குழந்தைகள் நல மையங்கள் தொடங்குதல்.

(*27—வினா எண். 223) திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குழந்தைகள் நல மையங்கள் இல்லாத கிராமங்களில் புதிய குழந்தைகள் நல மையங்கள் தொடங்கும் உத்தேசம்அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் நல மையங்கள் இல்லாத கிராமங்களில் புதிய குழந்தைகள் நல மையங்களைத் தொடங்குகிற உத்தேசம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதால் இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை சந்திரசேகரன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஏழை விவசாயக் கூலித் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களின் குழந்தைகளைப் பராமரிக்கத் தஞ்சை மாவட்டத்தில் அதிகமான குழந்தைகள் நல மையங்களை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவரவர்களே, வரும் நிதியாண்டில் எந்த எந்த மாவட்டத்தில் புதிய குழந்தைகள் நல மையம் ஆரம்பிக்க தேவை ஏற்படும் என்பதை ஆராய்ந்து அரசுக்கு செயற் குறிப்பு அனுப்பச் சொல்லி ஆங்காங்கே இருக்கிற மாவட்ட சமூக நல அதிகாரிகளுக்கு அரசு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய பகுதியில் குழந்தைகள் அதிகமாக இருக்கிற இடத்தில் இப்படிப்பட்ட மையங்கள் தேவை என்று கருதினால் தஞ்சை மாவட்ட சமூக நல அதிகாரியைச் சந்தித்து அதற்கான விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் நல மையங்களில் பட்டதாரி ஆசிரியர்களை நியமித்து, நர்சரி பள்ளிகளைப் போன்று அவற்றை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தக் குழந்தைகள் நல மையங்கள் இப்படிப்பட்ட நர்சரிப் பள்ளிகளாகத் தான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. குழந்தைகள் நல

[1989 ஏப்ரல் 4]

அமைப்பாளர்கள் என்று அங்கே நியமனம் செய்யப்பட்டிருக்கிறவர்களுக்கு இந்தக் கல்வியைக் கற்றுக் கொடுப்பதற்கு பயிற்சி அளித்து, நர்சரிப் பள்ளிகளுக்கு ஒப்ப அங்கே கல்வி வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகக் குழந்தைகள் நல மையங்கள் தொடங்குவதற்குரிய செயற் குறிப்பைப் பரிசீலிக்கும் போதும் கிராமப்புறங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கக் கூடிய காலனிப் பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அங்கே குழந்தைகள் நல மையங்களைத் துவங்குவதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பரிசீலிக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குழந்தைகள் நல மையம் தொடங்குவதற்குக் குறைந்தபட்சம் 70 குழந்தைகள் அந்தப் பகுதியில் இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிற இடத்தில் அப்படி பயன்பெறத்தக்க 70 குழந்தைகள் இருப்பார்களேயானால், கிராமப் பகுதிகளில் அது எந்தப் பகுதியாக இருந்தாலும் மையங்கள் அமைத்துத் தரப்படும்.

திரு. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் வல்லம் ஊராட்சி ஒன்றியத்தில் இப்படிப்பட்ட குழந்தைகள் நல மையங்கள் தொடங்குவது பற்றி அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனவே, ஏற்கெனவே அரசின் பரிசீலனையில் இருந்து வந்திருக்கிற இடங்களிலாவது புதிய குழந்தைகள் நல மையம் அமைக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஒரு குழந்தைகள் நல மையத்தினைப் பற்றி அறிய விரும்பினால் அது குறித்துத் தனியாகக் கேள்வி எழுப்பப்படுமேயானால், அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அவருக்குத் தெரிவிக்க இயலும்.

திரு. மா. சுந்தரதாஸ் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்தில் 70 குழந்தைகள் என்றில்லாமல் 10 அல்லது 15 குழந்தைகள் இருக்கக்கூடிய மையங்கள் கூட சில இடங்களில் இருக்கின்றன. எனவே, அத்தகைய மையங்களை 70 அல்லது 80 குழந்தைகள் இருக்கின்ற பகுதிகளுக்கு மாற்றித் தருகிற உத்தேசம் உள்ளதா ? இன்னும் சொல்லப் போனால் 5 அல்லது 6 குழந்தைகள் இருக்கின்ற மையங்கள் கூட இருப்பதை கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் எனவே அப்படி 5, 6 குழந்தைகள் வருகின்ற இடங்களாக

இருந்தால் அந்த மையங்களைக் குழந்தைகள் அதிகமாக வருகின்ற பகுதிகளுக்கு மாற்றி மையங்கள் அமைத்துக் கொடுக்கின்ற உத்தேசம் அரசுக்கு உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்சம் 60 அல்லது 70 குழந்தைகள் இருக்க வேண்டும் என்று தான் அரசு அறிவிப்பு செய்திருக்கிறது. நானும் பல மையங்களைச் சென்று பார்த்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போல் 5, 6 குழந்தைகள் என்ற குறுகிய எண்ணிக்கையில் இல்லை ; 25, 35 என்ற அளவில் சில மையங்களில் குழந்தைகள் பயன் பெற்றுக் கொண்டிருந்தார்கள். நான் அதிகாரிகளை அது பற்றிக் கேட்ட நேரத்தில் இந்த மையத்திற்குக் குழந்தைகளைக் கூட்டி வருகிற ஆயாக்களினுடைய முறையீடு என்னவென்றால், இந்த மையங்கள் நீண்ட தொலைவில் அமைக்கப்பட்டிருப்பதால் குழந்தைகளை வெகுதொலைவில் இருந்து அழைத்து வர சிரமமாக இருக்கிறது ; எனவே தான் குழந்தைகள் பெருமளவில் இந்த மையங்களுக்கு வந்து பயன்பெற முடியாத நிலைமை இருக்கிறது என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இவைகளையெல்லாம் அரசு ஆராய்ந்து குழந்தைகள் அதிகம் இருக்கிற, மக்கள் அதிகம் வசிக்கிற பகுதிகளுக்கு இப்படிப்பட்ட மையங்களை மாற்றி அமைக்கிற உத்தேசம் அரசின் செயற் குறிப்பில் உள்ளது.

ஆதி திராவிட மாணவர் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகை.

28—(*வினா எண். 4) திரு. என். பழனிவேல் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆதி திராவிட மாணவர்களுக்கான விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் உதவித் தொகையை உயர்த்திக் கொடுக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1988–89 ஆம் கல்வியாண்டிலிருந்து விடுதியில் தங்கிப் பயிலும் ஆதி திராவிட பழங்குடி மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதி திராவிட மாணவர்களுக்கு மாநில அரசு கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றுக்கு ரூ. 25 வீதம் உயர்த்தித் தர ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூ. 25 வீதம் அதிகப்படுத்தப்படும் என்று இங்கே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாள்